# செயலாற்றுகை அறிக்கை

# 2015

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# உள்ளடக்கம்

பக்க இலக்கங்கள்


| | |
|---|---|
| 1. அறிமுகமும் பின்னணி விபரங்களும் | 1 |
| 2. தொலை நோக்கும் - பணிக் கூற்றும் | 2 |
| 3. அமைப்பு முறையும் - நிருவாகமும் | 3 - 4 |
| 4. தாபனப் பிரிவு | 5 - 7 |
| 5. அபிவிருத்திப் பிரிவு | 8 - 11 |
| 6. தகவல் தொழில் நுட்பப் பிரிவு | 12 |
| 7. உற்பத்திப் பிரிவு | 13 - 14 |
| 8. வெளியீட்டுப் பிரிவு | 15 |
| 9. விநியோகப் பிரிவு | 16 - 18 |
| 10. கணக்குப் பிரிவு | 19 - 22 |
| 11. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 23 - 24 |

# கல்வி வெளியீட்டுத் திணைக்கள செயலாற்றுகை அறிக்கை 2015

## அறிமுகம்

நாட்டின் மாணவச் செல்வங்களுக்கு சுதந்திரக் கல்வியின் பயனைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான பாடசாலைப் பாடநூல்களை இலவசமாக வழங்குதல் மற்றும் அதனுடன் தொடர்பான மேலதிக வாசிப்பு நூல்கள், கற்றல் சாதனைகளை உற்பத்தி செய்தல் போன்ற தேசிய கைதரியத்தை நடைமுறைப்படுத்தும் கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் உயர் தரத்திலான ஒரு திணைக்களமாகக் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் நிறுவப்பட்டுள்ளது.

## பின்னணி

1965 மார்ச் 27 ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தனியான செலவுப் பிரிவொன்றாகக் கல்வி வெளியீட்டுத் திணைக்களமானது நிதி அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டதுடன், 1966 செப்டம்பர் 30ஆம் திகதியன்று அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அப்போதைய கல்வி மற்றும் கலாச்சார அமைச்சின் கீழ் செயற்ப்படுகின்ற திணைக்களமொன்றாக மீள் தாபனம் செய்யப்பட்டது.

1966 ஆம் ஆண்டு மேற் குறிப்பிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல மூலம் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு பின் வரும் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- ❖ ஆரம்ப, இரண்டாம் நிலை, மற்றும் உயர் தரக் கல்விகளின் பயன்பாட்டின் பொருட்டு அனுமதிக்கப்பட்ட பாடநூல்களை மொழிப் பெயர்த்தல், பகிரங்கப் படுத்தல், விநியோகித்தல், விற்பனை செய்தல் மற்றும் வெளியீட்டு உரிமையை விலை கொடுத்து வாங்குதல் (கொள்வனவு செய்தல்).
- ❖ கல்வி நடவடிக்கைக்கு தேவைப்படக் கூடிய பாடநூல்கள், அகராதிகள், களைச்சொற் றொகுதிகள் வேறு நூல்களை உற்பத்தி செய்தல், பகிரங்கப் படுத்தல், விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல்.
- ❖ மாணவர்களுக்கான துணைச்சாதணங்கள் கற்புல – செவிப்புல மற்றும் வேறு சாதனங்களை உற்பத்தி செய்தல், விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல்.
- ❖ வாசித்தல் சாதனங்களின் உற்பத்தியினை ஊக்குவித்தல்.

1965ஆம் ஆண்டு B தரத்திலான ஒரு திணைக்களமாக அமைக்கப்பட்ட கல்வி வெளியீட்டுத் திணைக்களமானது 2004.07.14 ஆம் திகதி முதல் உயர்தரத்தையுடைய ஒரு திணைக்களமாகச சீரமைக்கப்பட்டு மறுசீரமைக்கப்பட்டதுடன் திணைக்களத்தின் பிரதான பதவிப் பெயர் கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் என உயர்த்தப்பட்டது. இது கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் பதவிக்குச் சமனான ஒரு பதவியாகும்.

பிரதான அடிப்படைச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கு இலகுவாகும் பொருட்டு திணைக்களமானது அபிவிருத்தி, உற்பத்தி, விநியோக, வெளியீடு, தகவல் தொழிநுட்பம், நிதி மற்றும் தாபனப் பிரிவுகள் எனப் பிரிக்கப்பட்டு அதன் கீழ் முகாமைத்துவ உதவியாளர், அபிவிருத்தி அலுவளர், காரியாலய சேவை ஊழியர்கள், வாகன ஓட்டுனர்கள், போன்ற உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுப் செயலாற்றுவதற்கு கட்டமைக்கப்பட்டுள்ளது.

# தொலை நோக்கும் பணிக் கூற்றும்

## தொலை நோக்கு

சர்வதேச கல்வி அபிவிருத்தியுடன் இணைந்ததாக உயர்தரத்திலான கல்வித் துணைச் சாதனங்களை உற்பத்தி செய்து விநியோகிப்பதன் மூலம் அனைவருக்கும் கல்வியைப் பெற்றுக் கொடுப்பதை உறுதி செய்தல்.

## பணிக் கூற்று

இலவசப் பாடநூல் விநியோகம் எனும் அரசின் தேசிய கருத்திட்டத்தைச் செயற்படுத்துவதுடன், கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவைப்படக் கூடிய ஏனைய பாடநூல்கள், செயல் நூல்கள், மொழிப்பெயர்ப்பு நூல்கள், கலைச் சொல் அகராதிகள், மேலதிக வாசிப்பு நூல்கள், சொற் ˙களஞ்சியங்கள், வேறு கட்புல – செவிப்புல சாதனங்கள் உட்பட ஏனைய துணைச் சாதனங்களை உற்பத்தி செய்து விநியோகிப்பதனால், கல்வித் தரத்தை விருத்தி செய்வதன் மூலம் நாட்டுக்கு செயற்றிறன் மிக்கதும், அறிவும் பண்பும் கொண்ட, திறமை மிக்க பிரஜைகள் குழு ஒன்றை உருவாக்கவதில் பங்களிப்புச் செய்தல்.

## கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பும் - நிர்வாக ஒழுங்கும்

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியாகச் பணியாற்றும் கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்திற்கு நிருவாக நடவடிக்கைகளில் இலங்கை கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தரான ஆணையாளர் இருவரதும் பிரதி மற்றும் உதவி ஆணையாளர்கள் 34 பேரினதும் உதவிகிட்டுகின்றது. நிதிப் பிரிவுக்கு பொறுப்பாக பிரதான கணக்காளராகச் செயற்படுபவர் இலங்கை கணக்காளர் சேவை தரம் 1ஐச்சேர்ந்த ஓர் அதிகாரியாவார் கணக்காளர் சேவை தரம் III ஐச் சேர்ந்த ஓர் அதிகாரியும் அடுத்த கணக்காளர் பதவியிலிருந்து செயற்படுகின்றார் உள்ளகக்கணக்காய்வுப் பிரிவுக்குப் பொறுப்பாக இலங்கை கணக்காளர் சேவை தரம் 1ஐச் சேர்ந்த ஓர் அதிகாரியும் கடமை மேற்கொள்கின்றார்.

நிருவாக இலகுபடுத்தலின் நிமித்தம் திணைக்களமானது தாபனப் பிரிவு, அபிவிருத்திப் பிரிவு, உற்பத்திப் பிரிவு, வெளியீட்டுப் பிரிவு, விநியோகப் பிரிவு, நிதிப் பிரிவு, உள்ளக கணக்காய்வுப் பிரிவு, தகவல் தொழிநுட்ப் பிரிவு என 8 பிரதான பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

திணைக்களத்தின் ஒழுங்கமைப்பைக் காட்டும் கட்டமைப்பு மறுபக்கத்தில் காணப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது

# கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்புச் கட்டமைப்பு



## 4. தாபனப் பிரிவு

தாபனப் பிரிவின் முதன்மை கருமம் திணைக்களத்தின் சாதாரண நிருவாகமும் மற்றும் அனைத்து ஊழியர்களதும் நிறுவன நடவடிக்கை தொடர்பான அரச கரும நடவடிக்கைகளை நிறைவு செய்தலுமாகும்.

2015.12.31 திகதியன்று திணைக்கள உத்தியோகத்தர்களின் ஒழுங்கமைப்பு கீழ்வருமாறு

| பதவி | உரிய சேவை | வகுப்பு / தரம் | அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர் தொகை | தற்போதுள்ள தொகை | பதவி வெற்றிட தொகை |
|---|---|---|---|---|---|
| கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் | இ.க.நி.சே | I | 01 | 01 | - |
| ஆணையாளர் | இ.க.நி.சே | I | 01 | 01 | 01- |
| பிரதான கணக்காளர்<br>பிரதம உள்ளக கணக்காளர்<br>கணக்காளர் | இ.க..சே<br>இ.க.சே<br>இ.க.சே | I<br>I<br>II/III | 01<br>01<br>01 | 01<br>01<br>01 | -<br>-<br>- |
| பிரதி ஆணையாளர்<br>உதவி ஆணையாளர் | இ.க.நி.சே | I/II<br>III | 38 | 34 | 04 |
| உதவி ஆணையாளர் (தகவல் தொழிநுட்பம் முறைமை பகுப்பாய்வாளர்) | இ.த.அ.தொ.நு.சே | III | 01 | 01 | - |
| நிருவாக உத்தியோகத்தர் | அ.மு.உ.சே | உயர் தரம் | 01 | 01 | - |
| விற்பனை முகாமையாளர் | திணைக்களத்தினால் | | 01 | 01 | - |
| மொழி பெயர்பாளர் | திணைக்களத்தினால் | சிங்களம்/தமிழ்<br>சிங்களம்/ஆங்கிலம் | 01<br>01 | -<br>01 | 01 |
| கணணி பக்க அமைப்பாளர் | திணைக்களத்தினால் | | 06 | - | 06 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை | அ.மு.உ.சே<br>அ.மு.உ.சே<br>அ.மு.உ.சே | I<br>II<br>III | 55 | 40 | 15 |
| நூலகர் | நூலகர் சேவை | III | 01 | 01 | - |
| அபிவிருத்தி உதவியாளர் | கிட்டிய சேவை | | 34 | 18 | 16 |
| நிதி உதவியாளர்<br>வரவு செலவுஉதவியாளர் | கிட்டிய சேவை<br>கிட்டிய சேவை | | 01<br>01 | 01<br>01 | - |
| சரவை நோக்குனர் | திணைக்களத்தினால் | சிங்கள மொ.மூ<br>ஆங்கில மொ.மூ<br>தமிழ் மொ.மூ | 02<br>01<br>01 | -<br>-<br>- | 02<br>01<br>01 |
| சித்திரக்கலைஞர் | திணைக்களத்தினால் | - | 01 | - | 01 |
| சாரதி | சாரதிமார் சேவை | I<br>II 'அ'<br>II 'ஆ' | 12 | 12 | - |
| காரியாளய ஊழியர் சேவை | கா.ஊ.சே | I<br>II<br>III | 15 | 12 | 03 |
| அச்சு இயந்திர இயக்குனர் | | | 02 | - | 02 |
| எந்திர உதவியாளர் | | | 02 | - | 02 |
| விற்பனை உதவியாளர் | | | 15 | 13 | 02 |
| களஞ்சியசாலை காவலர் | முதனிலை சேவை | | 07 | 07 | - |
| களஞ்சியசாலை ஊழியர் | முதனிலை சேவை | | 35 | 147 | - |
| ஆய்வு கூட ஊழியர் | முதனிலை சேவை | | 01 | - | 01 |
| நூலக களஞ்சிய ஊழியர் | முதனிலை சேவை | | 01 | | 01 |
| **மொத்தம்** | | | **242** | **292** | **59** |

| பதவி | மாற்றம் பெற்று வந்தோர் தொகை |
|---|---|
| 1.இலங்கை கல்வி நிருவாக சேவை | 01 |
| 2.அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை | 02 |
| 3.நூலகர் | 01 |
| 4.சாரதி | 02 |

**2015 ஆம் ஆண்டிற்குள் மாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்**

| பதவி | உத்தியோகத்தர் தொகை |
|---|---|
| 1. இலங்கை க. நி. சேவை | 01 |
| 2. அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை | 02 |

**2015 ஆம் ஆண்டிற்குள் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்**

| பதவி | உத்தியோகத்தர் தொகை |
|---|---|
| 1. இலங்கை க. நி. சேவை | 03 |
| 2. அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை | 04 |
| 3. வியாபார உதவியாளர் | 02 |
| 4. களஞ்சிய ஊழியர் | 01 |
| 5. களஞ்சிய காவலாலர் | 01 |

**2015 ஆம் ஆண்டிற்குள் புதிதாகப் பதவியேற்றோர்**

| பதவிகள் | உத்தியோகத்தர் தொகை |
|---|---|
| 01. அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை | 03 |

**2015 ஆம் ஆண்டிற்குள் கேட்டு விலகினோர்**

| பதவி | உத்தியோகத்தர் தொகை |
|---|---|
| 01.காரியாலய ஊழியர் சேவை III | 01 |

**2015 ஆம் வருடத்துள் பதவியை விட்டு விலகினோர்**

| பதவி | உத்தியோகத்தர் தொகை |
|---|---|
| 01 அபிவிருத்தி அலுவலர் | 01 |

-

| இலக்கம் | காலப்பகுதி | நடைபெற்ற பயிற்சி நிலையம் / பயிற்சி நெறி | பயிற்சி நடந்த நாடு | கலந்து கொண்ட உத்தியோகத்தர் |
|---|---|---|---|---|
| 1 | 2015.03.23 முதல் 2015.05.01 வரை | The professional Training Proggramme on prinding and Digital Publishing in Eaducadion | தாய்லாந்து | திருமதி ரி.எம் வித்தாரன<br>திருமதி ஆர்.ஏ.ஏ.எஸ் ரூபசிங்க |
| 2 | 2015.07.13 முதல் 2015.07.22 வரை | | தாய்லாந்து | திருமதி டப்ல்யு.டி பத்மினி நாலிகா<br>திருமதி ஆர்.டி விஜே விக்ரம<br>திருமதி டப்ல்யு.ஐ தர்ஷிகா<br>திருமதி எஸ்.டி கஸ்துாரியராச்சி<br>திருமதி பி.ஜயசேகர<br>திருமதி எ.குலரத்னம் |

**திணைக்களத் ஒதுக்கின் கீழ் பெற்றுக் கொடுக்கப்பட்ட தேசிய மட்டத்திலான பயிற்சிகள்**

1. திறன் விருத்தி நிதியம் மூலம் நடாத்தப்பட்ட . Managing Performance Through setting annuali kpis பாடநெறியால் ஏழு உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்

02. திறன் விருத்தி நிதியம் மூலம் நடாத்தப்பட்ட காரியாலய உதவியாளர் உத்தியோகதரின் பொறுப்புகளும் கடமைகளும் தொடர்பான பாடநெறியில் 52 உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்

03. நிர்மான எந்திரவியல் பயிற்சி நிலையம் மூலம் நடாத்தப்பட்ட களஞ்சியபடுத்தல் - பயிற்சி பாடநெறியில் இரண்டு உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்

## அபிவிருத்திப் பிரிவு

அரசினால் பாடசாலைப் பாடநூல்களை இலவசமாக வழங்கும் தேசிய கொள்கையை நடைமுறைப் படுத்துவதே கல்வி வெளியீட்டுத் திணைக்களத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான பொறுப்பாகும். அதில் மிக முக்கிய பொறுப்புகள் நிறைவேற்றப்படுகின்ற அபிவிருத்திப் பிரிவைக் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் கல்விப் பிரிவாக அறிமுகப்படுத்த முடியும். தேசிய கல்வி நிறுவனம் மூலம் ஆக்கப்படுகின்ற பாடத்திட்டத்துக்கு இணங்கியதாக பாடநூல்களை ஆக்குதலும் மீள் அச்சிடப்படுகின்ற பாடநூல்களின் தரத்தை அதிகரிப்பதற்குத் தேவையான மாற்றுவழிகளைத் திட்டமிடுதலும் அவற்றை நடைமுறைப்படுத்தலும் போன்றனவே கல்வி வெளியீட்டுத் திணைக்கள அபிவிருத்திப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான பொறுப்பாகும். இது போன்றே உயர்தரத்திற்கும் வேறு உயர் பரீட்சைகளுக்கும் தோற்றுகின்ற மாணவ மாணவியருக்கு மேலதிக அறிவை வழங்கக்கூடிய மேலதிக நூல்களை ஆக்குவதும் அபிவிருத்திப் பிரிவு மூலம் இடம் பெறுகின்றது.

ஆணையாள ரொருவரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று பிரிவுகளாக அபிவிருத்திப் பிரிவு இயங்குகின்றது. பிரதி மற்றும் உதவி ஆணையாளர் 33பேரினதும் அபிவிருத்தி அலுவலர் 07 பேரினதும் ஒத்துழைப்புடன் பாடநூலாக்க செயற்பாடு இடம்பெறுகின்றது.

2015 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப் படுத்தப் படுகின்ற புதிய பாடத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் தரம் 06 முதல்தரம் 10 வரையிலான புதிய பாடநூல்களை ஆக்குதல் செயற்பாட்டில் அபிவிருத்தி பிரிவின் மூலம் 2015 ஆம் ஆண்டிற்ளும் விசேடகருமங்கள் மேற்கொள்ளப்பட்டன இவற்றுள் தரம்7 தரம் 11 களுக்கான புதிய பாடத்திட்டத்திற்கேற்ப பாடநூல்களை ஆக்கும் பணி 2015 ஆம் ஆண்டு இடம்பெற்றது அத்துடன் புதிய பாடதிட்ட மறுசீரமைப்பின் கீழ் ஆரம்பப்பிரிவு வகுப்புகளுக்காக -தரம் 1முதல் 5வரை புதிய பாடநூல்களும் ஆரம்பிக்க பட்டதும் 2015 ஆம் ஆண்டு அபிவிருத்தி பிரிவுப் மேற்கொண்ட மற்றுமொரு சட்டமாகும் அதில் தரம் 1 இற்கான புதிய பாடத்திட்டதிற்கு இணங்கியதாக 02 பாடநூலாக்கமானது 2015 இல் இடம்பெற்றது அத்துடன் தரம் 1 முதல் 11 வரை ஏனைய தரங்களுக்குரிய பாட நூல்களில் அவசியமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அவ்வனைத்து பாட நூல்களும் மீண்டும் அச்சிடப்பட்டன.

மேலதிகமாக உயர் தரத்திற்குப் புதிதாக அறிமுகப் படுத்தப்பட்ட தொழினுட்பத் துறையை பிரதானமாகக் கொண்டு ஏனைய பாடத்துறைகளையும் உள்ளடக்கும் விதத்தில் மேலதிக நூல்களை ஆக்குவதற்கும் 2015 ஆம் ஆண்டு முன்னுரிமை வழங்கபட்டது

அபிவிருத்திப் பிரிவு மூலம் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு விசேட செயற்பாடாக பிரேல் பாடநூல் அச்சிடலைக் குறிப்பிட முடியும். பார்வைக் குறைபாடுள்ள மாணவ மாணவியருக்காக ஆரம்பிக்கபட்ட பிரேல் நூல் அச்சிடல் பணி 2015 ஆம் ஆண்டு மேலும் தொடர முடிந்தமை மகிழ்ச்சி கரமானதொரு விடயமாகும்.

**2015 ஆம் ஆண்டினுள் அபிவிருத்திப் பிரிவு மூலம் செயற்படுத்தப்பட்ட கருமங்கள்**

1. 2016 ஆம் ஆண்டுக்காக தேசிய கல்வி நிறுவகம் மூலம் ஆக்கப்பட்ட புதிய பாடத் திட்டத்திற்கு இணங்க தரம் 7 தரம் 11 இற்கும் தரம் 1 இற்கும் புதிய பாடநூல்களை எழுதுதல்

2. ஏனைய தரங்களுக்காக எழுதப்பட்ட பாடநூல்கள் பிரிவெனா நூல்களின் தரங்களை பரிசீலித்து குறைகள் காணப்படின் அவற்றைத் திருத்தி மீள் அச்சிடலை மேற்கொள்ளல்

3. புதிய பாடத்திட்டதிற்கினங்க ஆக்கப்பட்ட புதிய பாடநூல்களின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு தொடர் செயலமர்வுகளை 2015 ஆம் ஆண்டும் ஏற்பாடு செய்யப்பட்டன இதன்போது 2015 ஆண்டு ஆக்கப்பட்ட புதிய பாடநூல்கள் மீள் பதிப்புக்கு முன்னர் பாடநூலின் எழுத்தாளர் அல்லது பதிப்பாசிரியர் குழு அங்கத்தினர் அல்லாத வளவாளர்களினால் பரிசீலிக்கபட்டன இத் தொடர் செயலமர்வுகள் 2015 பெப்ரவரி மார்ச் மாதங்களில் பெலவத்த (CETRAC) நிறுவனதில் இடம்பெற்றன. இவ்வாறு தரத்தைப் பரிசீக்கும்போது குறிப்பிட்ட பாடத்திட்டம் உள்ளடக்கப்பட்டிருத்தல், மொழிப் பிழையின்மை, விடயதானங்களின் பிழையற்ற் தன்மை, பொறுத்தப்பாடு போன்றன பரிசீலிக்ப்பட்டன

| செயலமர்வுகள் இடம்பெற்ற தினங்கள் | செயலமர்வில் பங்கு கொண்ட வளவாளர்களின் தொகை | |
|---|---|---|
| 2015.பெப்ரவரி. 18,19,20<br>2015.பெப்ரவரி 24,25,26 | 22<br>62 | முக்கிய பாடங்களுக்காக ஆக்கப்பட்ட தரம் 06 - 10க்கான பாட நூல்களை பாடப்புலமை கொண்ட வெளிவளவாளர்களை வரவழைத்துப் பரிசீலனை செய்தல். |
| 2015.மார்ச் 09,10, 11<br>2015.மார்ச் 16,17,18<br>2015.மார்ச 24,25,26 | 36<br>38<br>38 | ஏனைய பாடங்களுக்காக ஆக்கப்பட்ட தரம் 6-10க்கான பாடநூல்களை பாடப்புலமை கொண்ட வளவாளர்களை வரவழைத்து பரிசீலனை செய்தல். |

| இடம்பெற்ற தினங்கள் | பங்கு பற்றிய வளவாளர்களின் எண்ணிகை | |
|---|---|---|
| 2015 செப்டம்பர் 03,04 | 32 | தரம் 07 இன் 4பாடத்துக்கான07பாடநூல்களும் தரம் 11இன் 13 பாடங்களுக்கான 27 பாடநூல்களும் மூன்றாம் தர பணி மூலம் பரிசீலிக்கப்பட்டன |
| 2015 ஆகஸ்ட் 25,26,27 | 50 | தரம் 7 இன் 12 பாடங்களுக்கான 18 பாடநூல்களும் தரம் 11 இன் 13 பாடங்களுக்கான 19 பாடநூல்களும் மூன்றாம் தரப்பின் மூலம் பரிசீலிக்கப்பட்டன |

மேலும் 2016 ஆம் ஆண்டுக்கு தரம் 7-11களுக்காக ஆக்கப்பட்ட புதிய பாடநூல்களை மாணவர்களுக்கு வழங்குவதற்கு முன்னர் அந்நூல்களின் தரத்தை மேம்படுத்தும் தொடர் செயலமர்வுகளும் 2015 ஆகஸ்ட் ,செப்டம்பர் மாதங்களில் நடாத்தப்பட்டன இதில் இப் பாடநூல்களை மூன்றாம் தரப்பின் மூலம் பரிசீலிப்பதன் மூலம் பாடநூ ல்களின் நாட்களை மேம்படுத்தல் நடைபெற்றது .

4. கல்வி வெளியிட்டுத் திணைக்களம் 2015 ஆம் வருடத்துள் புதிதாக அச்சிடப்பட்டதும் மீள் அச்சு செய்யப்பட்டதுமான மேலதிக நூல்களின் பல்வேறு வகைகளை ஆக்குவதில் அளப்பரிவு பங்களிப்பு செய்தது உயர் தரத்துக்காக அறிமுகப்படுத்தப்பட்ட தொழினுட்பப் பாடத்துறையை மையமாகக் கொண்டு 2015 ஆம் ஆண்டு உயர்தரக் மாணவர்களுக்காக மேலதிக வாசிப்பு நூல்கள் பலவற்றை ஆக்குவதற்கு முன்னுரிமை வழங்கியது .

- - தொழிநுட்ப வியலுக்கான விஞ்ஞானம் - கணிதம் I ஆம் பகுதி
- - தொழிநுட்ப வியலுக்கான விஞ்ஞானம் - இரசாயனவியல் I ஆம் பகுதி
- - தொழிநுட்ப வியலுக்கான விஞ்ஞானம் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம்
- - தொழிநுட்ப வியலுக்கான விஞ்ஞானம் - உயிரியல் தொழினுட்பம்
- - உயிர் முறைமைகள் தொழினுட்பம் I ஆம் பகுதி
- - எந்திரவியல் தொழினுட்பம்

- 5ஆம் தரத்திற்கான புலமைப் பரிசில் பரீட்சை வினாப் பத்திரமும், விடைகளும் அடங்கிய வினாவிடை நூல்களை சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழி மூலங்களிலும் அச்சிடல்
- க.பொ.த (உயர் தரம்) கலை, வர்த்தகம், விஞ்ஞாத்துறைகளுக்குப் பயன் மிக்கதான வினாப்பத்திர சஞ்சிகைகள் வெளியிடப்பட்டன.

- க.பொ.த உயர் தரப் பரீட்சை விஞ்ஞான துறை கடந்த கால பரீட்சை வினாத் தாள்களும் விடைகளும் -(2014)
- க.பொ.த உயர் தரப் பரீட்சை வணிகத் துறை கடந்த கால பரீட்சை வினாத் தாள்களும் விடைகளும் - (2014)
- க.பொ.த உயர் தரப் பரீட்சை கலைத் துறை கடந்த கால பரீட்சை வினாத் தாள்களும் விடைகளும் - புவியியல் -(2014)
- க.பொ.த உயர் தரப் பரீட்சை கலைத் துறை கடந்த கால பரீட்சை வினாத் தாள்களும் விடைகளும் (2014) அரசியல
-
- க.பொ.த.சதாரனத் தரப் கடந்த காலப் பரீட்சை வினாத்தாள்களும் விடைகளும்(கணிதம்)-2014
- க.பொ.த.சதாரனத் தரப் கடந்த காலப் பரீட்சை வினாத்தாள்களும் விடைகளும்(ஆங்கிலம்-2014)
- க.பொ.த.சதாரனத் தரப் கடந்த காலப் பரீட்சை வினாத்தாள்களும் விடைகளும்(சிங்களம்)-2014
- க.பொ.த.சதாரனத் தரப் கடந்த காலப் பரீட்சை வினாத்தாள்களும் விடைகளும்(வரலாறு)-2014
- க.பொ.த.சதாரனத் தரப் கடந்தகாலப் பரீட்சை வினாத்தாள்களும் விடைகளும்(விஞ்ஞானம்)-2008-2014
-
- • 2015 ஆம் ஆண்டு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் மூலம் வெளியிடப்பட்ட வேறு மேலதிக நூல்களும் அபிவிருத்தி பிரிவு மூலம் ஆக்கப்பட்டன.
-

• இரசாயனவியலுக்காக சொல் அகராதி ஆக்கப்பட்டன.

• க.பொ.த உயர் தரப் வணிகத்துறைக்கான சொற்கரும் முகாமைத்துவம் எனும் கணக்கியல் நூலை ஆக்குதல்

• சிங்கள மொழி தொடர்பான தலை சிறந்த கல்வியலாலர் குழுவென்று இணைந்து ஆக்கிய (சிங்கள லேக்கன வியஹாரய உபதேச)எனும் நூல் வெளியிடப்படல்

• பார்வை குறைபாடுள்ள மாணவர்களுக்கென ஆரம்பிக்கபட்ட பிரேல் பாடநூல் அச்சிடலானது 2015 ஆம் ஆண்டு மிதச் செயற் திறன் மிக்கதாக மேற்கொள்ள முடிந்தது.

• புதிய பாடதிட்டதிற்கினங்க 2015 ஆம் ஆண்டு எழுதப்பட்ட 7-11 சிங்கள மொழி மூலப் பாடநூல்கள் மற்றும் ஏனைய அனைத்து சிங்கள பாடநூல்கள் நாடு முழுவதுமுள்ள பார்வைக் குறைபாடுள்ள மாணவர்களுக்காக பிரேல் முறைக்கு மர்ற்றப்பட்டு பிரேல் மொழி மூல பாடநூல்களாக்கப்பட்டன .

• தமிழ் மொழி மூல பிரேல் பாடநூல்களின் தரத்தை விருத்தி செய்யும் பொருட்டு பிரேல் அற்றி கொண்ட தமிழ்ப் பட்டதாரிகள் மற்றும் ஆசிரியர்களை தொடர்பு கொண்டு செயலமர்வொன்றை நடாத்துதல்.

• இதுவரை மேற்கொள்ளப்பட்ட பிரேல் அச்சிடல் முறையை மிகச் செயற்திறன் மிக்கதாக்கும் பொருட்டு வாங்கப்பட்ட புதிய பிரேல் அச்சு இயந்திரம் மூலம் பிரேல் பாடநூல்களின் பெரியதொரு தொகையை அச்சிடல்.

•. பௌதிக ரீதியாக உயர் தரத்தை கொண்ட பாடநூல்களை உருவாக்குதல் எனும் நோக்கத்தை முதன்மையாக கொண்டு நூல் அச்சிடுதலுக்காக பயன்படுத்தும் கடதாசியின் பொருத்தப்பாடு, தரம் போன்றவற்றை அளவிடுவதற்காக ஆய்வுக்கூடம் ஒன்றை நடாத்திச் செய்வதுடன் 2015 உற்பத்தி செய்பட்ட அனைத்து பாடநூல்களின் கடதாசி கீழ்வரும் தர அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டது.

GSM 80 + 2.5 (Tolerance)

Printing Paper - (Quality wood, Free surface sized)

Brightness (ISO) (கடதாசியின் பொழிவு) - 82% minimum

Opacity (ஊடுருவி செல்லவிடாத் தன்மை) - 90% minimum

Tensile index - MD - 35 min kNm/kg

- CD - 20 min kNm/kg

## தகவல் தொழினுட்பப் பிரிவு

திணைக்களத்தின் சகல தரவுகளையும் நடாத்திச் செல்லல், நிகழ் நிலை படுத்தல் தொடர்பான பொறுப்புகளுடன், பாடநூல்கள், மேலதிக வாசிப்பு நூல்கள் ஏனைய நூல்களைக் கணிணி மயப்படுத்தல், அவற்றின் மென் பிரதியை பெற்று அச்சிடுவதற்கு பொருத்தமான விதமாக வடிவமைத்தல் என்பனவே இப் பிரிவின பிரதான கடமையாகும்.

உதவி ஆணையாளர்-தகவல் தொழில்நுட்பம்/முறைமை பகுப்பாய்வாளர(03)

↓

அபிவிருத்தி உத்தியோகத்தர்(0)

↓

கனிஷ்ட சேவை ஊழியர்(06)

↓

சமயா சமய ஊழியர்(02)

### தகவல் தொழினுட்பப் பிரிவின் கடமை பொறுப்புக்கள்

1. 2016 ஆம் ஆண்டுக்கான கோரல் படிவத்தை வடிவமைத்து அச்சிடுவதற்கு ஒப்படைத்தல்.
2. அபிவிருத்தி பிரிவில் ஆக்கப்படும் பாடநூல்களைக் கணிணி மயப்படுத்தலும் மென் பிரதியைத் தயார் செய்தலும், வெளிப்புற அட்டையை தயாரித்தலும்.
3. களஞ்சியசாலைகளில் பாடநூல் விநியோகிக்கும் விபரங்களை கணிணி மயப்படுத்துவதற்குத் தேவையான கணிணிச் செயலொழுங்கொன்றை வடிவமைத்து களஞ்சியசாலைகளின் தகவல்களை நடாத்திச் செல்லல்.
4. விநியோகித்து முடிக்கப்பட்ட பாடநூல்களின் அளவையும், நூல்களின் பெறுமதியையும் நிதிப்பிரிவுக்குப் பெற்றுக் கொடுத்தல்
5. திணைக்கள வெப் தளத்தை நிகழ்நிலைப்படுத்தி நடாத்திச் செல்லுதலும் வெப் தளத்திற்குப் பாடநூல்களை உள்வாங்கலும்.

06. கல்வி வெளியீட்டுத் திணைக்களம் மற்றும் கல்வி அமைச்சின் விழாக்களுக்குத் தேவைப்படக்கூடிய அழைப்பிதல்கள், பதாதைகள், சுவரொட்டிகளை (பெனர், போஸ்டர்) வடிவமைத்தல் .

07. திணைக்களத்தின் அனைத்து கணிணிகள் மற்றும் மின் உபகரணப் பொருட்களைப் பராமரித்தலும் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கலும்.

# உற்பத்திப் பிரிவு

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் உற்பத்திப் பிரிவில், உற்பத்தி மற்றும் விநியோகத்திற்குப் பொறுப்பான ஆணையாளரின் கீழ் உற்பத்திப் பிரிவுக்குப் பொறுப்பான உதவி ஆணையாளர் ஒருவரும், மற்றுமொரு உதவி ஆணையாளரும், அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை அதிகாரிகள் மூவரும்,அபிவிருத்தி அதிகாரி ஏழுவரும்,காரியாலய உதவியாளர்கள் சேவையை சேர்ந்த இருவரும், சமயா சமய அடிப்படையில் சேவை செய்யும் இருவரும் சேவையாற்றுகின்றனர்.

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பணிப்பின் பேரில் பாடசாலை மாணவர்களுக்காகத் உற்பத்தி செய்யப்படுகின்ற சகல பாடநூல்களையும் அரசாங்க அச்சகம், அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை அச்சகத்தார் மூலமாக அச்சிடச் செய்தல. என்பன இப்பிரிவின் பிரதான பணிகளாகும்.

இதற்கு மேலதிகமாக தேசிய கல்வி நிறுவகம் மூலம் ஆக்கப்படுகின்ற ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் மற்றும் பாடத் திட்டங்களை அச்சிட்லும் இடம்பெறுகின்றது

மேலும் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு மதிப்பீட்டறிக்கை அச்சிடல் உயர் கல்வியை மேற்கொள்ளும் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஏனையோருக்காக அவசியமான மேலதிக வாசிப்பு நூல்களை ஆக்கி அச்சிடலும் இடம்பெறுகின்றன.

**2014 ஆம் ஆண்டிற்குள் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் விபரங்கள் கீழ் வருமாறு**

1. பாடசாலைப் பாடநூல்களை விலை கோரலுக்கு வழங்கு முன் நியமக் குறிப்பீடு அமைப்பதற்காக தகவல்களை ஒன்றுதிரட்டல் தகவல் தொழில்நுட்பப் பிரிவு விநியோகித்தல் பிரிவு, மற்றும் களஞ்சியங்களிலிருந்து மொத்தத்தைப் பெற்றுக் கொள்ளல்.
2. அம் மொத்த இருப்பை அடிப்படையாகக் கொண்டு நியமக் குறிப்பீட்டுக் குழுவொன்றின் மூலம் 2016 க்கான பாடசாலைப் பாடநூல்களை அச்சிடுவதற்கான நியமக்குறிப்பீடுகளைப் ஒழுங்குப்படுத்தல்
3. நியம குறிப்பிட்டுத் குழுவால் அமைக்கப்பட்ட கல்வி வெளியீட்டு ஆணையாளர் மூலம் அனுமதிபெற்று நிதிப் பிரிவிற்கு ஒப்படைத்தல்.
4. ஓவ்வொரு பாடப் பொறுப்பு அதிகாரிகளுக்கும் அச்சகப்பிரதி மாற்றல் பிரிதி ஆகியவற்றை வழங்கி அவற்றில் திருத்தங்களை மேற்கொண்டு இறுவட்டை தகவல் தொழிநுட்பப் பிரிவு மூலம் பரசீலனை செய்து கொள்ளல்.
5. உரிய விலை கோரலை வென்ற நிறுவனத்திற்கு அச்சக பிரதியையும் இறுவட்டையும் வழங்கல்
6. புதிதாக எழுதப்பட்ட தரம் 1,7,11 நூல்களுக்காக பாடப் பொறுப்பாளர்களிடமிருந்து விபரங்களைப் பெற்று புதிய நியமக் குறிப்பீட்டை வடிவமைத்தல்
7. சரவை பார்த்தல் சந்தர்ப்பம் முதல் முன்னீட்டு அச்சுக்கான அனுமதி, அச்சுக்கான அனுமதி, களஞ்சிய அனுமதி தர அறிக்கை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் வரையிலான சகல நடவடிக்கைகளையும் பரிசீலித்தல்
8. குறிப்பிட்ட கால கட்டத்துள் அச்சகத்தாரை உணர்வூட்டி பிழையற்ற நூல் தொகையை களஞ்சிய சாலைக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
9. நூல்களில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய போதும் நூல்களின் தொகைகளின் பிழைகளைத் திருத்தும்போதும் உற்பத்தியாளர்களுக்கு அறிவுறுத்தி அவற்றை சரிப்படுத்தல்.
10. அவசியம் ஏற்படின் தேவையான அச்சகங்களைப் பரிசீலித்தலும் - அவற்றின் அச்சிடல் தொடர்பான திட்டங்களைப் பெற்று அவற்றைப் பரிசீலனைக்குட்படுத்தி உற்பத்திப் போக்கு
11. பாடசாலை பாடநூல்களின் பௌதிக தன்மையை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் இதற்கினங்க உள்ளடக்கப்பட்டுள்ள காகிதத்தாள் மற்றும் வெளி

அட்டைகளுக்காக நான்கு வர்ணச்சித்திரம் வரைப்படங்களை உட்ப்படுத்தல் வெளி அட்டைக்காக ஆட்போட் லமினேட் பண்ணிய 220gsm காகிதத்தைத் உட்படுத்துவதன் மூலம் கவர்சிமிக்க பாடநூல் தொகுதியொன்றை மாணவர்களுக்கு வழங்கள்

12. சகல நூல்களும் நியம குறியீட்டுக்கினங்க காணப்படுகின்றதா என்பதை பரிசீலிப்பதற்காக ஆய்வு கூட அறிக்கையை பெற்று கொள்ளல்
13. தேசிய கல்வி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு ஆசியர் வழிகாட்டல் நூல்களை அச்சிடல்.
14. மேலதிக நூல்களை அச்சிடல்
15. பரீட்சை திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு க.பொ.சாதரன தரம் மற்றும் க.பொ.உயர் தரம் மற்றும் தரம் 05 புலமை பரிசில் வினா விடை நூல்களை அச்சிடல்.

**முன்னேற்றத்தைக் காட்டும் அட்டவணை**

**2016ம் ஆண்டிற்காகப் பாடசாலைப் பாடநூல் அச்சிடல் 2014**

| தொடர் இல | அச்சகம் | நூல் வகைகளின் எண்ணிக்கை | பிரதிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | ஐக்கிய செய்தி பத்திரிகை கம்பனி | 10 | 3,098,000 |
| 02 | அரசாங்க அச்சகம் | 05 | 1,002,000 |
| 03 | அரசாங்க அச்சக கூட்டுத்தாபணம் | 65 | 9,110,600 |
| 04 | திறந்த விலைக்கோரல் (Teander) | 330 | 30,862,500 |
| **அச்சிடப்பட்ட நூல்களின் மொத்தம்** | | **410** | **44,073,100** |

**2016ம் ஆண்டிற்காக ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் அச்சிடல் 2014**

| தொடர் இல | நூலின் வகை | நூல் வகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | 1-5 ஆசிரியர் அறிவுரை வழிகாட்டி | 11 |
| 02 | 6-11 ஆசிரியர் அறிவுரை வழிகாட்டி | 123 |
| 03 | 12-13 ஆசிரியர் அறிவுரை வழிகாட்டி | 48 |
| **அச்சிடப்பட்ட நூல் வகைகளின் மொத்தம்** | | **182** |

**வினா விடை நூல்கள் மற்றும் மேலதிக நூல்களை அச்சிடல் 2015**

| தொடர் இல | நூலின் வகை | நூல் வகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | மேலதிக நூல்கள் | 38 |
| 02 | வினா விடை நூல்கள் | 17 |
| **அச்சிடப்பட்ட நூல்வகைகளின் மொத்தம்** | | **55** |

## வெளியீட்டுப் பிரிவு

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் வெளியீட்டுப் பிரிவானது ஆணையாளர் (உற்பத்தி மற்றும் விநியோகம்)இன் வழிகாட்டலின் கீழ் செயற்படுகின்றது. வெளியீட்டுப் பிரிவு பிரதம முகாமைத்துவ உதவியாளரான அதிகாரி ஒருவரின் கண்காணிப்பின் கீழ் மேலும் முகாமைத்துவ உதவியாளர் சேவை அதிகாரிகள் ஐவரினதும் களஞ்சிய ஊழியர்களினதும் சேவையைப் பெற்றுக் கொண்டு கீழ்வரும் கடமை பொருப்புக்களை 2015ம் ஆண்டு நிறைவு செய்துள்ளது.

- 410 பாடநூல் வகைகளினதும், 117 ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளினதும் அச்சிடுவதற்கான கோரல்களை அச்சகத்திற்குப் பெற்றுக் கொடுத்தல்.

- பாடநூல்கள், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள், மற்றும் மேலதிக வாசிப்பு நூல்கள் 590க்குறிய ஒப்பந்தங்களை ஒழுங்குபடுத்தி அச்சக உரிமையாளர்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ளல்.

- மேலதிக வாசிப்பு நூல்கள் 63ற்கு உரிய மதிப்பீடு (Estimate) கோருதல் தொடக்கம் அச்சிடுதல் வரையிலான சகல நடவடிக்கைகளும்

- விலை மனுக்கோரலுக்கு புறம்பாக பாடநூல்களுக்காக மதிப்பீடு கோருதல் முதல் கோரல்களை ஒப்படைக்கும் வரையிலான சகல நடவடிக்கைகளும்.

- 2014.05.03 ம் திகதிய இலக்கம் 14 / 0467 / 530 / 015 கொண்ட அமைச்சரவை தீர்மானம் மற்றும் திரைசேரி சுற்றுநிருப இலக்கம் 281க்கு இனங்க நூல்களின் விலைகளைத் தீர்மானித்தல்.

- அச்சிற்காக ஒப்படைக்கப்படுகின்ற சகல நூல்களிற்கும் உரிய தொகை அறிக்கை , தர அறிக்கை, அச்சிடுவதற்கான அனுமதி, மென் பிரதி அறிக்கை மற்றும் விலை விவரப் பட்டியலை (Invoice) பெற்றுக் கொள்வதுடன் அச்சிடுதலுக்கான கொடுப்பணவை செலுத்துவதற்குமான உரிய வவுச்சர்களை தயார் செய்தலும்.

## விநியோகப் பிரிவு

பாடநூல் விநியோகப் பிரிவானது, உற்பத்தி மற்றும் விநியோகத்திற்குப் பொறுப்பான ஆணையாளரின் கீழ் உதவி ஆணையாளரொருவரின கண்காணிப்புடன் நிருவகிக்கப்படுகின்றது. இதில் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை உத்தியோகத்தர் இருவரும் நிரந்தர கனிஷ்ட சேவையாளர்கள் 20 பேரும்,சமயாசமய ஊழியர்கள் 07 பேரும் பணிபுரிகின்றனர் அரச மற்றும் அரசின் உதவி பெறுகின்ற பாடசாலைகளில் 1-11 வரையுள்ள வகுப்புகளில் கல்வி கற்கும் 4மில்லியனுக்கும் கூடிய மாணவர் தொகையினருக்கு ஒவ்வொரு பாடசாலை வருடமும் ஆரம்பிப்பதற்கு முன்னர் பாடநூல்களை விநியோகித்தலே இப்பிரிவுக்கு ஒப்படைக்கப்படடுள்ள கடமையாகும். இக்கருமங்களின் போது பாடசாலைகளிலிருந்தும் விநியோக நிலையங்களிலிருந்தும் பெற்றுக் கொள்ளப்படும் புள்ளி விவரங்களை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு பாடசாலைகளுக்கும், விநியோக நிலையங்களுக்கும் தேவைப்படும் நூல்களின் தொகை தீர்மாணிக்கப்படுகின்றது.குறிப்பிட்ட வருடத்துக்குத் தேவையான நூல்களின் முழுத்தொகை இப்புள்ளி விபரங்களை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கபடுகின்றது .

### கடமைகள்

- ❖ நாடுபூராகவும் உள்ள தேசிய பாடசாலைகளுக்கும், அரசின் அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்கும் பிரிவொனக்களுக்கும் புதிய பாடசாலை ஆண்டு ஆரம்பமாகும் முன்னர் பாடநூல்களை விநியோகித்தல்.

- ❖ நாடுபூராகவும் உள்ள தேசிய பாடசாலைகளுக்கும், அரசின் அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்கும் பிரிவொனக்களுக்கும் வலய கல்வி காரியாலயங்களுக்கும் ஆசிரியர் வழிகாட்டிகளை விநியோகித்தல்.
- ❖ பாடநூல் விநியோக நிலையங்களிருந்து/கோட்ட கல்வி காரியாளயங்களிருந்து பாடநூல்களை பெற்று கொள்ளும் சகல மாகாண பாடசாலைகளுக்கும் பாடநூல் போக்குவரத்து கொடுப்பனவை செலுத்துதலும் பாடநூல் விநியோக நிலையம்,மற்றும் கோட்ட கல்வி காரியாலய நிலைய பொறுப்பதிகாரி/உதவி நிலைய பொறுப்பதிகாரி,மற்றும் சிற்றுழியர் கொடுப்பனவுகளை செலுத்துதல்.
- ❖ பாடநூல் போக்குவரத்து நிறுவனங்களுக்காக கொடுப்பனவு வவூச்சர்களை வடிவமைத்தல். பாடசாலை பாடநூல் தேவைகள் சம்மந்தமான தகவல்களை திரட்டுதல்/ நிகழ்நிலை படுத்தல் / அவற்றின் சுருக்கத்தை அமைத்தல் மற்றும் களஞ்சிய படுத்தி வைத்திருத்தல் .
- ❖ மாகாண கல்வி காரியாலங்களுக்கும்/வலய கல்வி காரியாலயம்/கோட்ட கல்வி காரியாலயம் பாடநூல் விநியோக நிலையம் மற்றும் நாட்டில் உள்ள சகல பாடசாலைகளையும் இணைப்பாக்கம் செய்து பாடநூல்களின் தேவைகளை பூரணபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

- ❖ விநியோக காலக்கட்டதில் பாடநூல்கள் இடைத்தல் மற்றும் விநியோகித்தல் தொடர்பாக நாளாந்த அறிக்கையை தயார் செய்தல்.

- ❖ திணைக்களத்துக்குரிய பாடநூல் களஞ்சிய நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்வதன் மூலம் தொகைகளை பெற்று கொள்ளல் விநியோகித்தல் தொடர்பான அறிக்கைகளை பிழையின்றி நடாத்தி செல்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளல்.

## பாடநூல் விநியோகம்

2016 ஆம் ஆண்டுக்குரிய பாடநூல் விநியோக செயற்திட்டதிற்கிணங்க நாடு பூராகவுமுள்ள தேசிய பாடசாலைகள் மற்றும் மாணவர் தொகை 2000திற்கும் கூடிய மாகாண பாடசாலைகளுக்கு கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் மூலம் நேரடியாக பாடநூல்கள் விநியோகிக்கப்படுவதுடன் ஏனைய அரச பாடசாலைகளுக்கு பாடநூல் விநியோக நிலையங்களுடாக நூல் விநியோகம் இடம் பெற்றது மேலும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்கும் பாடநூல்கள் இலவசமாக வழங்கப்பட்டன. இதன்போது கொழும்பு வலைய சகல பாடசாலைகளுக்கும் நுகேகொட கோட்டத்தை சோர்ந்த சகல பாடசாலைகளுக்கும் பாடநூல்கள் நேரடியாகவே விநியோகிக்கப்பட்டன இதன் படி அரச பாடசாலைகள் 10121,அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் மற்றும் விஷேட பாடசாலைகள் 103,பிரிவொனாக்கள் 74 உள்ளடங்கிய 42 இலட்சம் மாணவர்களுக்கு 420 வகையான பாடநூல்களின் கீழ் ஏற குறைய 42 மில்லியன் நூல்கள் விநியோகிக்கப்பட்டன .

## பாடநூல் மீள்பாவனையுடன் தொடர்பான நடவடிக்கைகள்

பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாகப் பகிரப்படுகின்ற பாடநூல்களை மீள்பாவனையின் பொருட்டு வருட இறுதியில் பாடசாலைக்கு திருப்பி ஒப்படைக்கப்படல் வேண்டும். (ஆரம்பப் பிரிவுகளுக்காக அச்சிடப்பட்ட பாடநூல்கள், செயல்நூல்கள், க.பொ.த.(சாத)தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நூல்கள் திருப்பி எடுக்கப்பட மாட்டாது) தரம் ஆறு முதல் தரம் ஒன்பது வரையிலான வகுப்புகளில் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கான பாடநூல்களில் மீள் பாவணை தொடர்பான செயற்பாடொன்று நடைமுறைப்படுத்தப்படுவதுடன் பாடநூல்கள் சிறப்பாகவும், பொருப்புடனும் பயன்படுத்துவதன் அவசியம் பற்றிய அறிவொன்றை வழங்குவதுடன், அரசினால் இதற்காக மேற்கொள்ளப்படுகின்ற செலவுகளைக் குறைப்பதே இச்செயற்பாட்டின் நோக்கமாகும்.

## பாடநூல் விநியோக விழா

2016 ஆம் ஆண்டிற்குறிய பாடநூல் விநியோகத்திற்கான உத்தியோகப் பூர்வ விழா இம்முறை கொழும்பு ஆனந்தா கல்லூரியில் ஒழுங்கு செய்யப்பட்டது 2016 ஜனவரி 5 ஆம் திகதியன்று அவ்விழா கௌரவ கல்வி அமைச்சரினதும் கல்வி இராஜங்க அமைச்சினதும் கல்வி செயளாளரினதும் தலைமையிலும் பங்குபற்றலுடனும் இடம்பெற்றது. இதன்போது விஷேட தேவையுள்ள மாணவர்களுக்கான பாடநூல் பகிர்வு இடம்பெற்றமை ஒரு விஷேட அம்சமாகும். நாடு முழுவதும் உள்ள சகல பாடசாலைகளிலும் பாடசாலைப் பாடநூல்கள் விநியோகிக்கப்படும் தினமாக இத்தினம் பிரகடணப்படுத்தப்பட்டதுடன் இதனுடன் இணைந்ததாக சகல பாடசாலைகளிலும் பாடநூல் விநியோகச் செயற்பாடொன்று ஒழுங்கமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

## நூல் விநியோக உப குழுக்கள்

பாடநூல் விநியோக சந்தர்ப்பங்களில் விஷேட கவனம் செலுத்தப்படவேண்டிய பிரிவுகளுக்காகப் பல உப குழுக்களை தெரிவு செய்ய செய்ய வேண்டி யேற்பட்டது.

(I) பாடநூல்களின் தரமட்ட மதிப்பீட்டுக் குழு அதிகாரிகள் அந்தந்தப் பாடங்களுக்கு இணங்கவும், மொழி மூலத்திற்கு இணங்கவும், தெரிவு செய்யப்பட்டு களஞ்சிய சாலைக்குக் கிடைக்கும் நூல்களைத் திடீர் பரிசீலனைக்குற்படுத்தும் செயற்பாடு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டது.

(II) நிகழ்ச்சித் திட்ட உருவாக்கத்திற்கும் முன்னேற்றக் கட்டுப்பாடுக்குமான பரிவொன்று நூல் விநியோகப் பிரிவுடன் ஒன்றினைக்கப்பட்டது. நூல் விநியோக நிகழ்ச்சி நிரலைத் திட்டமிடல் மற்றும் பாடசாலைகள், நூல் விநியோக நிலையங்கள், கோட்டங்களுக்கு அனுப்பப்படுகின்ற பாடநுல்களுக்கான விநியோகக் கட்டளைகளை தயார் செய்தல் என்பன இதன் பொருப்புக்களாகும். களஞ்சியச்சாலைக்குக் கிடைக்கும் நூல்களின் வகைகள், தொகைகள் பற்றிய நாளாந்த விபரங்களைப் பெற்றுக் கொண்டு விநியோகக் கட்டளைகளை சீர்படுத்தும் நோக்கில் ஒரே மாவட்டத்திற்கு நூல்களைக் கொண்டு செல்லும் முறைகளை குறைப்பதற்கு இதனால் முடிந்துள்ளது.

(III) பாடநூல் கோரல்படிவங்கள் 3 வகைகளில் அச்சிடப்பட்டு கோட்டகல்விப் பணிப்பாளர்கள், அதிபர்களுக்கு அனுப்பப்படுகின்றன. விபரங்களை எடுக்கும்போதும் பாடநூல்களை விநியோகிக்கும் போதும் இடம்பெறும் தவறுகளைக் குறைத்து அக்கருமங்களை காரிய சித்தியுடனும் பிழையின்றியும் நிறைவேற்றுவதற்கு இதனால் முடிந்துள்ளது. ஆரம்பப் பிரிவெனாக்களுக்குறிய பாடநூல்களும் கோட்டக்கல்வி காரியாலயத்தினூடாக விநியோகிக்கப்படுகின்றன. ஆரம்பப் பிரிவெனாக்களின் பிரிவெனா தலைமை மதக்குருக்களின் பிரிவெனாக்களுக்குத் தேவையான பாடநூல் தொகை தொடர்பான கணக்குகள், வருடாந்த பாடநூல் கோரல் படிவங்களுக்கே உள்வாங்கிப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**பாடநூல் போக்குவரத்துக்கான கொடுப்பணவு வவுச்சர் ஒழுங்குப்படுத்தல்**

(I) பாடநூல் விநியோக நிலையத்திலிருந்து பாடசாலைவரை நூல்களை எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்திற்காக அதிபர்கள் மேற்கொண்ட செலவுகளை மீளப் பெரும் பொருட்டு க.வெ.தி அனுப்பும் வவுச்சர் பத்திரங்களை பரிசீலனைச் செய்து நிதிப்பிரிவிற்கு அனுப்பி வைத்தல்.

(II) பாடநூல் போக்குவரத்து நிறுவனங்களுக்கான கொடுப்பணவு வவுச்சர் பத்திரங்களை வடிவமைத்து தேவையான மேலதிக நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைத்தல்.

## கணக்குப்ப்பிரிவு

கணக்கு பிரிவிற்காக பிரதம கணக்காளர், கணக்காளர் உட்பட முகாமைத்துவ உதவியாளர் சேவையின் பதின்நான்கு பேரும் வரவு செலவு உதவியாளர் ஒருவரும், நிதி உதவியாளர் ஒருவரும் இணைக்கப்பட்டுள்ளனர்.

### கடமைப் பொருப்புக்கள்

- வருடாந்த செலவு மதிப்பீடு (உத்தேச செலவு) முற்பணக்கணக்கு எல்லையை ஒழுங்கமைத்தல் மற்றும் உத்தேச எல்லைத் திருத்தல்களுக்குகேற்பதான நடவடிக்கைகள்
- பாடசாலைப் பாடநூல்கள் அச்சிடுவதற்கும், பாடநூல் போக்குவரத்திற்கும் தேவையான விலை கோரல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- சகல திணைக்கள ஊழியர்களுக்குமான வேதனங்களை ஒழுங்குப்படுத்தலும், காசோலைகளை விநியோகித்தலும்.

- திணைக்களத்தின் சகல ஊழியர்களினதும் மேலதிக நேரக் கொடுப்பணவு, போக்குவரத்துச் செலவு, வேறு கொடுப்பணவுகளை செலுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- ஊழியர்களின் மீள் நிரப்புக் கடன்கள், துவிச்சக்கர கடன் மற்றும் உற்சவ முற்பணத்தை வழங்குவதும் அவற்றைத் திருப்பி அறவிடலும்.

- ஊழியர்கள் நிமித்தம் பணம் மூலம் வழங்கப்படுகின்ற சகல கொடுப்பணவுகளையும் மேற்கொள்ளல் (சம்பளம், மீளலித்தல் கடன்கள் நீங்களாக)

- கொடுப்பனவு நடவடிக்கையின் பொருட்டு தேவையான சகல புத்தகங்களையும் பதிவேடுகள் கணக்கு அறிக்கைகள் போன்றவற்றை நடைமுறைப்படுத்தல்.

- மாதாந்தக் கணக்குச் சுருக்கம், வைப்புக் கணக்கு அறிக்கைகள், வங்கி ஒப்பீட்டு அறிக்கைகளைத் தயார் செய்தல்

- வருடாந்த விடுவிப்புக் கணக்கு, முற்கொடுப்பணவு கணக்குகளின் இறுதிக் கணக்கு அறிக்கைகளை ஒழுங்குப்படுத்தல்.

- திணைக்களத்தின் சகல பிரிவுகளுக்கும் அவசியமான நுகர்வுப் பொருட்கள், மூலதனப்பொருட்களைக் கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல்
- திணைக்களத்துக் குரிய சகல பயன்படுத்தல் சேவைக்குமான பற்றுச் சீட்டுகளையும் (Bil) செலுத்தல்.

- பாடநூல் அச்சிடல் செலவு,மற்றும் போக்குவரத்துச் செலவுகளைச் செலுத்தல்.

- பாடநூல் விநியோக அதிகாரிகளுக்கான கொடுப்பனவு, மற்றும் பாடநூல்களை எடுத்துச் செல்வதற்காக அதிபர்களுக்கு வழங்கும் கொடுப்பனவு, மற்றும் களஞ்சியப்படுத்தல் நிலையப் பொறுப்பதிகாரிக்கான கொடுப்பனவு போன்றவற்றையும் செலுத்தல்

- வருடாந்த பொருட்கள் பட்டியல் தொகைமதிப்பு போன்றவறை மேற்கொள்ளும் மதிப்பிடுக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தலும்.

- பாடநூல் விற்பனை மேம்பாட்டு நிலையங்களின் விற்பனை அறிக்கை படுத்தி வைத்தல்
- பாடநூல்களை ஆக்குதல், மொழிப்பெயர்ப்பு செய்தல், பதிப்பித்தல் போன்ற கருமங்களுக்காக கொடுப்பனவுகளை செலுத்துதல்.

- அச்சிடப்படும் சகல பாடநூல்களுக்குமான விலைகளை நிர்ணையித்தல். (விலைமனுக் கோரல்) அரிவுறைப்புக் கோவைக்கிணங்க திணைக்களத்தின் கொள்வனவு செய்தல் தொடர்பான விலைமனுக் கோருதல், தொழிநுட்பமதிப்பீட்டுக் குழுவை தொடர்புக்கொள்ளல், விலைகோரல் குழுவுக்கு முன்வைத்தல், அத் தீர்மானத்திற் செயற்படுதல் மற்றும் கொள்வனவு செய்தல் தொடர்பான கொடுப்பனவு.

- திணைக்களத்திற்குத் தேவையான ஏனைய சேவைகளைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பான கொடுப்பனவுகள்.

- முற்பணங்களை வழங்களும் அவற்றைத் திரும்பிப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலுல்.

- திணைக்களத்தின் பிரதான கிளைக்கு புணர் நிர்மாண, மூலதனச் செலவுகளினடிப்படையில் பெற்றுக் கொள்ளும் பொருட்களுக்கான ஆவணக் கோவைகளையும், ஆவணங்களைப் பேணலும் அப்பொருட்களை முறையானவகையில் விநியோகித்தலும்.

- வருடாந்த தொகை மதிப்பீட்டின் மூலம் சான்றுப்படுத்தப்படும் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்

- திணைக்கள்த்திற் குரிய அனைத்து வாகனங்கள் தொடர்பான கோவைப்படுத்தப்பட்ட ஆவணங்களைப் பேனலும் வாகனப் பராமரிப்பு, பழுது பார்த்தல் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் நிறைவேற்றலும்.

- வாகனத்திற்கான முறையானவாறு எரிப்பொருள் விநியோகம் பிரயான அட்டவணையைப் பரிசீலித்தல்.

- அரச நிதிச் சுற்றுநிற்பத்திற்கமைய “சிகாஸ்” வேலைத் திட்டங்களைச் சரியான முறையில் பேணிச் செல்லல்.

க.வெ.தி களமானது வருடாந்த கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் 3900 மில்லியன் ரூபாய் வரையிலான ஒதுக்கீட்டின் அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தனித்த நிதி அலகொன்றாகும்.

நூல் வெளியீட்டுக்கு உரித்தான ஒப்பந்தக் கைச்சாத்து உட்பட சகல நடவடிக்கைகளுக்கும் அவசியமான அதிகாரபலத்தையும், நிதிப் பலத்தையும் வழங்கி நூல் வெளியீட்டை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு முடியுமாகும் விதத்தில் கல்வி வெளியீட்டுத் திணைக்களமானது A தரத்திலான ஒரு திணைக்களத் தரத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

இலவச பாடநூல் விநியோகமாகிய அரசாங்க செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு மேலதிகமாக உயர் தரம் மகற்றும் ஏனைய பரீட்சைகளை நோக்காக கொண்டு கல்வி வெளியீடுகள் மற்றும் கடந்த வருடங்களின் பரீட்சை வினாத்தாள்கள் மதிப்பிட்டு நடவடிக்கை முறைகளை ஆக்கி அச்சிட்டு சலுகை விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் கீழ் ஆறு விற்பனை மேம்பாட்டு நிலையங்கள் கீழ் வரும் இடங்களில் நிறுவப்பட்டுள்ளன .

- கல்வி அமைச்சி வளாகம்
- வித்தியோதய பிரிவெனா
- யாழ்ப்பாண மத்திய கல்லூரி வளாகம்
- தேசிய கல்வி நிறுவகம் மஹரகம
- ஆசிரியர் பயிற்சி நிலையம் மீப்பே
- கோட்டை புகையிரத நிலையம்

திணைக்களத்தின் செலவின் நிமித்தம் வருடாந்தம் வரவுசெலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கப்படுகின்ற ஒதுக்கிற்கிணங்க ஒன்றிணைந்த நிதியிலிருந்து நிதி வழங்கப்படுகின்றது .

பாடநூல்கள், மேலதிக வாசிப்பு நூல்கள், மொழிப்பெயர்ப்பு நூல்கள், கலைச்சொல் அகராதிகள், சொற்களஞ்சியங்கள் மற்றும் கல்வி தொடர்பான இரு வெட்டுக்கள் கல்வியலாளர் குழுவொன்றின் மூலம் அனுமதிக்கப்பட்ட வெளி எழுத்தாளர்களின் நூல்கள் போன்றன விற்பனை மேம்பாட்டு நிலையங்களில் விற்பனை செய்யப்படுதுடன், தேசிய பாடத்திட்டத்தின் கீழ் ஆங்கில மொழி மூலமாகக் கல்வி கற்பிக்கின்ற தனியார் பாடசாலைகளுக்குப் பாடநூல்களை விற்பனை செய்வதையும் 2008 ஆம் ஆண்டு முதல் ஆரம்பித்துள்ளது. 2010 ஆம் ஆண்டு நடமாடும் ஊர்திகள் மூலம் நாடு முழுவதும் நூல் விற்பனைச் செய்யும் நடைமுறையும் ஆரம்பிக்கப்பட்டது.

## 2015 நிதிச் செயற்பாட்டு ஈ.வி அறிக்கை

| வரவு செலவு விபரம் | 2015 வருடாந்த ஒதுக்கு | 2015.12.31 திகதியன்று செலவு |
|---|---|---|
| **வகைப்படுத்தப்பட்ட செலவுகள்** | | |
| ஆளுக்குறிய வேதனங்கள் | 33,273,000.00 | 33,179,081.00 |
| வேறு மீண்டு வரும் செலவுகள் | 22,127,000.00 | 14,082,201.00 |
| **மொத்த மீண்டு வரும் செலவுகள்** | **55,400,000.00** | **47,261,282.00** |
| **மூலதனச் செலவுகள்** | | |
| மூலதனச் சொத்துக்களின் புணர் நிர்மாண மற்றும் புதுப்பித்தல் (வாகனங்கள்) | 300,000.00 | 292,176.00 |
| **மூலதனச் செலவுகளைக் கையாலுதல்** | | |
| தளபாடங்கள் மற்றும் காரியாலய உபகரணங்கள் | 1,682,000.00 | 1,680,934.00 |
| பொறித்தொகுதிகள் மற்றம் இயந்திரங்கள் | 4,226,900.00 | 3,322,775.00 |
| கட்டிடங்கள் மற்றும் நிர்மாணம் | 26,677,100.00 | 26,677,089.00 |
| பயிற்றுவித்தல் மற்றும் ஆளுமை விருத்தி | 3,014,000.00 | 3,013,887.00 |
| மொத்தம் | **35,600,000.00** | **34,694,685.00** |
| **ஏனைய மூலதனச் செலவுகள்** | | |
| பாடசாலை பாடநூல்களின் தரத்தை மேம்படுத்தல் (உலக வங்கி) | 20,000,000.00 | 14,403,143.00 |
| **அனுமதிக்கப்பட்ட முற்பணக் கணக்கு** | | |
| அதி கூடிய செலவு எல்லை (பாடநூல் அச்சிடல் மற்றும் விநியோகம்) | 3,950,000,000.00 | 3,931,821,770.10 |
| மிகக் குறைந்த வைப்பு எல்லை | 3,000,000,000.00 | 4,038,808,920.36 |

| | | |
|---|---|---|
| அதிகூடிய செலவு மீதி எல்லை | 4,000,000,000.00 | 803,505,928.21 |
| **அரச உத்தியோகத்தரின் முற்பணக் கணக்கு** | | |
| மிகக் கூடிய செலவு எல்லை | 6,930,000.00 | 6,835,806.00 |
| மிகக் குறைந்த வைப்பு எல்லை | 5,430,000.00 | 6,342,347.00 |
| மிகக் கூடிய செலவு மீதி எல்லை | 33,000,000.00 | 21,697,263.92 |

**2015ஆண்டு நூல்கள் விற்பனை மூலம் பெற்ற மொத்த வருமானம் ரூ.131,887,980.50 ஆகும்**

- கல்வி அமைச்சி வளாக நூல் விற்பனை நிலையம் -ரூ. 46,089,303.34
- வித்தியோதய நூல் விற்பனை நிலையம் -ரூ. 64,784,098.61
- யாழ்ப்பாண நூல் விற்பனை நிலையம் -ரூ. 3,286,617.05
- தேசிய கல்வி நிறுவகம் மஹரகம நூல் விற்பனை நிலையம் -ரூ. 13,057,413.50
- ஆசிரியர் பயிற்சி நிலையம் மீப்பே நூல் விற்பனை நிலையம் -ரூ. .2,716,416.50
- கோட்டை புகையிரத நிலையம் நூல் விற்பனை நிலையம் -ரூ. 1,954,131.50

-------------------------

**மொத்தம் ரூ. 131,887,980.50**

--------------------------

இதற்கு மேலதிகமாக தனியார் நூல் வெளியீட்டார்களின் நூல் விற்பனை செயற்பாடொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது

**2015ஆம் ஆண்டு தனியார் நூல் விற்பனை மூலம் பெற்ற மொத்த வரவு ரூ.1,226,404.22 ஆகும்**

- கல்வி அமைச்சி வளாக நூல் விற்பனை நிலையம்- ரூ. **897,836.22**
- வித்தியோதய நூல் விற்பனை நிலையம்- ரூ. **125,388.00**
- தேசிய கல்வி நிறுவகம் மஹரகம நூல் விற்பனை நிலையம்- ரூ **67,605.00**
- ஆசிரியர் பயிற்சி நிலையம் மீப்பே நூல் விற்பனை நிலையம்- ரூ. **132,310.00**
- கோட்டை புகையிரத நிலையம் நூல் விற்பனை நிலையம்- ரூ. **3,265.00**

## கல்வி வெளியீட்டு திணைக்கள நூல் விற்பனை வருமானம்-2015

| மாதம் | வித்தியோதய நூ.வி.நி | இசுருபாய நூ.வி.நி | யாழ்ப்பாண நூ.வி.நி | மீப்பே நூ.வி.நி | கோட்டை நூ.வி.நி | மஹரகம நூ.வி.நி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 6,852,890.99 | 2,909,001.50 | 178,807.15 | 191,608.00 | 112,166.00 | 897,012.00 | **11,141,485.64** |
| பெப்ரவரி | 5,630,544.50 | 2,114,819.50 | 140,594.95 | 197,840.00 | 143,799.00 | 1,217,785.00 | **9,445,382.95** |
| மார்ச் | 4,556,018.20 | 2,551,412.00 | 121,492.40 | 161,577.00 | 157,172.00 | 1,482,801.50 | **9,030,473.10** |
| ஏப்ரல் | 2,785,460.53 | 1,781,092.00 | 142,706.00 | 224,795.00 | 251,799.00 | 916,486.00 | **6,102,338.73** |
| மே | 5,445,479.23 | 3,077,671.00 | 214,062.90 | 290,460.00 | 202,147.00 | 1,496,497.00 | **10,726,317.13** |
| ஜூன் | 5,646,819.40 | 9,407,245.79 | 245,569.30 | 332,636.00 | 215,077.00 | 1,317,627.50 | **17,164,974.99** |
| ஜூலை | 5,585,692.30 | 1,881,847.50 | 206,334.20 | 215,361.00 | 186,273.00 | 998,320.00 | **9,072,828.00** |
| ஆகஸ்ட் | 4,408,260.58 | 1,596,429050 | 198,154.65 | 205,097.00 | 145,191.00 | 936,323.50 | **7,489,456.23** |
| செப்டெம்பர் | 5,330,866.45 | 1,775,634.50 | 255,467.80 | 199,855.00 | 157,865.50 | 943,148.00 | **8,662,836.25** |
| ஒக்டோபர் | 4,141,006.95 | 1,333,063.00 | 299,950.25 | 272,398.50 | 112,406.00 | 886,946.50 | **7,045,771.20** |
| நவம்பர் | 4,273,741.28 | 5,473,370.50 | 387,940.55 | 165,907.00 | 130,805.00 | 728,278.00 | **11,160,042.33** |
| டிசம்பர் | 10,128,318.20 | 12,187,716.55 | 895,536.70 | 258,882.00 | 139,432.00 | 1,236,188.50 | **24,846,073.95** |
| மொத்தம் | **64,785,098.61** | **46,089,303.34** | **3,286,617.05** | **2,716,416.50** | **1,954,131.50** | **13,057,413.50** | **131,887,980.50** |

## தனியார் நூல் விற்பனை வருமானம்

| மாதம் | வித்தியோதய நூ.வி.நி | இசுருபாய நூ.வி.நி | மீப்பே நூ.வி.நி | கோட்டை நூ.வி.நி | மஹரகம நூ.வி.நி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 9,290.00 | 6,200.00 | 8,420.00 | - | - | **23,910.00** |
| பெப்ரவரி | 10,430.00 | 5,175.00 | 13,435.00 | - | - | **29,040.00** |
| மார்ச் | 8,355.00 | 2,290.00 | 6,190.00 | - | - | **16,835.00** |
| ஏப்ரல் | 12,295.00 | 850.00 | 13,720.00 | - | - | **26,865.00** |
| மே | 10,790.00 | 3,430.00 | 10,220.00 | - | - | **24,440.00** |
| ஜீன் | 13,900.00 | 432,388.22 | 12,480.00 | 1,200.00 | - | **459,968.22** |
| ஜீலை | 6,625.00 | 426,193.00 | 7,305.00 | - | - | **440,123.00** |
| ஆகஸ்ட் | 9,790.00 | 1,665.00 | 10,300.00 | 475.00 | 10,770.00 | **33,000.00** |
| செப்டெம்பர் | 15,125.50 | 4,880.00 | 19,465.00 | - | 7,600.00 | **47,070.50** |
| ஓக்டோபர் | 17,295.50 | 8,900.00 | 15,630.00 | - | 13,560.00 | **55,382.50** |
| நவம்பர் | 11,495.00 | 3,585.00 | 4,990.00 | - | 9,760.00 | **29,830.00** |
| டிசம்பர் | - | 2,280.00 | 10,155.00 | 1,590.00 | 25,915.00 | **39,940.00** |
| மொத்தம் | **125,388.00** | **897,836.22** | **132,310.00** | **3,265.00** | **67,605.00** | **1,226,404.22** |

## உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

கல்வி வெளியீட்டு திணைக்களம் எதிர் பார்க்கும் நோக்கங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டு சொத்துகளின் பாதுகாப்பு தன்மையை காக்கும் பொருட்டு மிக திட்டமிடப்பட்ட உள்ளக செயற் திட்டங்களுடன் கூடிய முறையான நிறுவாக சூழல் ஒன்றை நடாத்தி செல்லும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவு நிறுவப்பட்டுள்ளதுடன் அது பிரதம உள்ளக கணக்காய்வாளரின்.
இப்பிரிவின் மூலம் முக்கியமாக உள்ளக பரிபாலன முறை நடைமுறைப்படுத்த படுவதை பரீட்சீத்தல் திணைக்களத்தில் திணைக்களம் எதிர்பார்க்கும் நோக்கங்களை நிறைவேற்றி கொள்ளும் பொருட்டு திட்டமிடப்பட்டுள்ள செயற்பாடுகளின் விளைவுகள் மாறும் செயற் திறன்களை பரீட்சித்தல் ,நிர்வாகம் ,கணக்காய்வு குறைபாடுகள் செயலாற்றகை நீதிக்கும் சட்ட நடைமுறைகளுக்கும் உட்படாத கொடுக்கள் வாங்கள் தொடர்பாக ஆய்வு செய்து கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களை கல்வி செயலாலருக்கு அறிக்கை சமர்பித்தல் மற்றும் கணக்குகாய்வு விசாரனை மோற்கோள்வதன் மூலம்

திருத்தி கொள்வதற்கான செயன்முறையை மேற்கொள்வதால் பினனுட்டல் மூலம் சிறந்த நிர்வாக முறை ஏற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.